VG BUSINESS MAGAZINE

FOR INTERNAL CIRCULATION ONLY

MARCH - 2022

வேட்டுவக்கவுண்டர் என்பது நமது பெருமை

மாதம்
MARCH

இதழ்
9

ஆசிரியர்
கவிதா வாழைபரமேஸ்வரன்

இணை ஆசிரியர்
Dr.வாழைபரமேஸ்வரன்

வடிவமைப்பு
கவிதா வாழைபரமேஸ்வரன்

MOBILE
90037 95243

EMAIL
vgbusinesstycoons@gmail.com

WEBSITE
vgtycoons.com

For Internal Circulation Only

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே...

முகப்புரை

மார்ச் 8 உலக மகளிர் தினம். நமது வேட்டுவக் கவுண்டர் சமுதாயம், பெண்களை எப்போதும் மதிப்புடனே நடத்தி வந்துள்ளது. நமது சமுதாயத்தின் முழு முதல் தெய்வம் ஆதி கொற்றவை. மேலும் ஊர் தோறும் பெண் தெய்வ வழிபாடே பிரதானமாக உள்ளது. அவ்வாறு பெண்களை முன்னிலைப்படுத்துவதில் நமது சமுதாய மக்கள் முன்னோடிகளாக உள்ளனர். நம்மின பெண்கள் அனைத்து துறைகளிலும் சாதனை புரிந்து வருகின்றனர். கல்வி, வேலைவாய்ப்பு, வணிகம், பொருளாதாரம், விவசாயம், விஞ்ஞானம், அரசியல் போன்றவற்றிலும் தனித்திறமையுடன் செயல்பட்டு வருகின்றனர். அனைத்து பெண்களாலும் சாதிக்க முடியும். அதற்குத் தேவை ஒரு சிறிய தூண்டுகோல். சரியான முறையில் வழி காட்டினால் அனைத்து பெண்களும் வெற்றி பெறுவர். நமது சமுதாய பெண்கள் அனைவருக்கும் மகளிர் தின நல் வாழ்த்துக்களையும் அவர்களின் வெற்றிக்கு பின்புலமாக இருக்கும் நம்மின ஆண்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவிதா வாழைபரமேஸ்வரன்



VG BUSINESS MAGAZINE February 2022 இதிலுள்ள விசயங்கள் மட்டுமல்ல, படங்களும், வடிவமைப்பும் மிக அருமையாக உள்ளது. இவ்வளவு அழகாக தொகுத்த ஆசிரியர் கவிதா வாழை பரமேஸ்வரன் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். அன்புடன்,

- மு.தேவராஜன்,
மாரப்பம்பாளையம்.

படைத்தளபதி ராமசாமி கவுண்டரின் புகழை (பெயரை) வெளியுலகிற்கு எடுத்துரைத்தமைக்கு நன்றிகள்.

- சசிக்குமார்
வாழநாய்க்கன் பாளையம்.

தொல்குடி வேட்டுவர்களின் வரலாற்று தகவல்கள் இனிவரும் இதழ்களிலும் வரவேண்டும், வாழ்த்துக்கள்.

- ஆளப்போறான் தமிழன்

நீங்களும் தொழில் முனைவோர் ஆகலாம் தொடர் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக உள்ளது. நன்றிகள் பல ...

- S. சுப்பிரமணி,
சென்னிமலை.

தங்க மங்கை கோமதி

நேபாளத்தில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் கலந்து கொண்டு சிலம்பாட்டம் - சுருள் வாள்வீச்சு போட்டியில் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார் நமது வீரமங்கை செல்வி.கோமதி. சிவகிரி அருகில் உள்ள ஒலப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவி கோமதி, சிறு வயதிலிருந்தே பல தங்கப்பதக்கங்களை வென்று விளையாட்டு துறையில் சாதனை படைத்து வருகிறார்.

தான் கற்ற சிலம்பக் கலையை தனது சுற்றுவட்டார கிராமப்புற குழந்தைகள் பலருக்கும் கற்பித்து வருகிறார். தனது மாணவர்களையும் பல்வேறு போட்டிகளில் பங்கு பெறச் செய்து பரிசுகளை பெற வைத்துள்ளார். மேலும் சிலம்பக் கலையை கற்றுக் கொண்டதன் மூலம் தனது தன்னம்பிக்கை அதிகரித்து உள்ளதாக கூறுகிறார். 12ம் வகுப்பு பயிலும் மாணவி கோமதி நமக்களித்த பேட்டியிலிருந்து.....

உங்களைப் பற்றி கூறுங்கள்?

பிறந்த ஊர் ஈரோடு மாவட்டம், விளக்கேத்தி கிராமம், ஒலப்பாளையம், புளியங்காட்டுத் தோட்டம். அப்பா பெயர் (லேட்) பழனிச்சாமி, அம்மா பெயர் வெள்ளையம்மாள். பாண்டி வேட்டுவர் குலம். குளவிளக்கு கிராமத்தில் உள்ள கன்னிமார் சாமி எங்கள் குல தெய்வம்.

சிலம்பாட்டத்தில் ஆர்வம் வந்தது எப்படி?

நான்காம் வகுப்பு படிக்கும் போதிலிருந்தே சிலம்பம் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். கராத்தே, கூடைப் பந்து, துப்பாக்கி சுடுதல் போன்ற மற்ற விளையாட்டுகளிலும் கலந்து கொண்டு வந்தேன். ஒன்பதாம் வகுப்பிலிருந்து படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு விளையாட்டை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலையில் நமது பாரம்பரிய கலையான சிலம்பாட்டத்தை தேர்ந்தெடுத்து விளையாடி வருகிறேன்.

உங்களுடைய குரு யார் ?

ஆரம்பத்தில் கருரை சேர்ந்த கிருஷ்ணராஜ் என்பவரும் பின்னர் திண்டுக்கல்லைச் சேர்ந்த லிங்கராஜ் அவர்களும் பள்ளிக்கு வாரம் ஒரு முறை வந்து கற்று தந்தனர். எனக்கு சிலம்பாட்டத்தில் அதிக ஆர்வமும் திறமையும் இருப்பதை அறிந்த பள்ளி நிர்வாகம் எனக்கு அரை நாள் பயிற்சி பெற அனுமதியளித்தனர்.

நேபாளத்தில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது எப்படி?

இதுவரை நான் நூற்றுக்கும் மேற்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளேன். விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் பங்கேற்று முதலிடம் பிடித்து தங்க பதக்கம் வென்றேன். இதனால் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்கத் தகுதி பெற்றேன். திருப்பூரில் கடந்த நவம்பர் மாதம் 27 ம் தேதி நடைபெற்ற School Games and Activities Development Federation நடத்திய தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்று அதிலும் முதலிடம் பிடித்து தங்க பதக்கத்தை வென்றேன். தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்று தங்கம் வென்றதன் மூலம் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றேன். சென்னையில் உள்ள ஈசன் சிலம்பாலயாவின் பயிற்சியாளர் திரு. விமல்நாத் பாண்டியன் அவர்கள் நேபாளில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் கலந்து கொள்ளும் படி அறிவுறுத்தினார். கடந்த

பிப்ரவரி 7 முதல் 11 ம் தேதி வரை நடைபெற்ற Youth Games International Championship - 2022 போட்டியில் கலந்து கொண்டு தங்கம் வென்றேன். விமல்நாத் பாண்டியன் அவர்களின் தலைமையில் 8 பேர் நேபாளம் சென்றிருந்தோம். நாங்கள் 8 பேருமே தங்கம் வென்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

சிலம்பம் விளையாட்டைப் பற்றி கூறுங்கள்?

சிலம்பத்தில் நிறைய வகைகள் உள்ளன. சிலம்பம் என்றாலே தடியில் மட்டும் தான் விளையாடுவார்கள் என்று பலரும் நினைத்துக் கொண்டுள்ளனர். சிலம்பத்தில் தடிவரிசை, மான்கொம்பு, வாள்வீச்சு, சுருள் வாள்வீச்சு, கேடயம், பிச்சுவாகத்தி இப்படி பல பிரிவுகள் உள்ளன. இதில் நான் சுருள் வாள்வீச்சு பிரிவில் தங்கப்பதக்கம் வென்றுள்ளேன்.

பெண்கள் எதற்காக சிலம்பம் கற்றுக் கொள்ள வேண்டும்?

ஆரம்ப கால கட்டங்களில் சிலம்பாட்டத்தில் ஆண்களே அதிக அளவில் ஈடுபட்டு வந்தனர். தற்போது பெண்களும் அதிக அளவில் இந்த கலையை கற்று வருகின்றனர். சிலம்பாட்டம் கற்றுக்கொள்வதன் மூலம் தன்னம்பிக்கை அதிகரிக்கிறது. மேலும் வேலை வாய்ப்பில் சிலம்பம் விளையாடும் வீரர்களுக்கு 3% இடஒதுக்கீடு வழங்க தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

திருப்பூரில் நடை பெற்ற தேசிய அளவிலான போட்டியில் தங்கம் வென்றதன் மூலம் ஃபார்ம் 2 வும் நேபாளில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் தங்கம் வென்றதன் மூலம் ஃபார்ம் 1 ம் எனக்கு கிடைத்துள்ளது. இதன் மூலம் மத்திய அரசு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது.

பெற்றோர்களின் ஒத்துழைப்பு எப்படி இருந்தது?

என்னுடைய பெற்றோர்கள் சின்ன வயதிலிருந்தே என்னை ஊக்கப்படுத்தி வருகின்றனர். கராத்தே போட்டிகளில் கலந்து கொள்ள நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும். அவர்கள் கஷ்டப்பட்டாலும் என்னுடைய சந்தோஷத்திற்காக மிகுந்த சிரமத்திற்கிடையே பணம் செலவழித்து போட்டிகளில் பங்கு பெறச் செய்தனர். சிலம்பாட்டத்தில் தொடர்ந்து வெற்றி பெற ஆரம்பித்தவுடன் இன்னும் அதிகமாக என்னை ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

இந்த இளம் வயதிலேயே பயிற்சியாளர் ஆனது எப்படி?

சிலம்பாட்டத்தில் நான் நன்றாக விளையாடுவதை பார்த்த எனது தமிழாசிரியை திருமதி. துளசிமணி அவர்கள் என்னை அவருடைய இரு மகள்களுக்கும்

சிலம்பம் பயிற்றுவிக்குமாறு கேட்டார். ஆரம்பத்தில் நான் ரொம்பவே தயங்கினேன். எனது தமிழாசிரியை அவர்கள் தான் என்னுடைய தயக்கத்தை போக்கினார். கொரோனா லாக்டவுன் காலகட்டத்தில் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சிலம்பம் பயிற்சியளிக்க முடிவு செய்து கடந்த 2020 டிசம்பர் 11 முதல் பயிற்சி வகுப்பு எடுக்க ஆரம்பித்தேன். குலவிளக்கு கிராமத்தில் 25 மாணவர்களும் விளக்கேத்தியில் 15 பேரும் மின்னப்பாளையம் கிராமத்தில் 40 மாணவர்களும் சிலம்பம் கற்று வருகின்றனர். வாரம் இருமுறை ஒரு மணிநேரம் அந்தந்த ஊர்களுக்கே சென்று இலவசமாக பயிற்சியளிக்கிறேன்.

உங்களால் மறக்க முடியாத தருணம் எது?

ஆறு மாதங்களுக்கு முன்பு என்னுடைய மாணவர்களை உலக சாதனை நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றிருந்தேன். கோபி வேங்கை சிலம்பாட்ட கலை கூடம், கொரோனா விழிப்புணர்விற்காக நடத்திய நோபல் உலக சாதனை நிகழ்ச்சி அது. ஒரு மணி நேரம் விடாமல் சிலம்பம் சுற்ற வேண்டும். என்னுடைய மாணவர்களோ புதிதாக கற்றுக் கொண்டு வருபவர்கள். அதிகபட்சம் 6 மாத காலம் தான் பயிற்சி பெற்றிருப்பர். அங்கே பங்கேற்ற மற்றவர்கள் அனைவரும் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்களாக

இருந்தனர். எனக்குள் ஒரு சிறிய பயம் இருந்தது. ஆனால் என்னுடைய மாணவர் குழுவினர் பத்து பேரும், ஒரு மணி நேரம் வெயிலில் நின்று தொடர்ந்து அதே வேகத்துடனும் உற்சாகத்துடனும் சிலம்பம் சுற்றினார்கள். ஒருவர் கூட கம்பை கீழே விடாமலும், தகுதி நீக்கம் செய்யப்படாமலும் அந்த சாதனை நிகழ்ச்சியை நிறைவு செய்தனர். என் வாழ்வில் மறக்க முடியாத தருணம் அது.

தன்னுடைய மிகப் பெரிய வெற்றியை கூட பிரதானமாக எண்ணாமல், தன்னுடைய மாணவர்களின் சாதனையை பெரிதாக பேசும் செல்வி. கோமதி அவர்களின் பண்பு வியக்க வைக்கிறது. செல்வி. கோமதி விளையாட்டுத் துறையில் மேலும் பல சாதனைகள் புரிய VG BUSINESS MAGAZINE தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

மென்பொருள் வித்தகி

Aveon Infotech ஒரு ISO 9001 : 2015 சான்றளிக்கப்பட்ட நிறுவனம். இது மென்பொருள் மேம்பாடு, பராமரிப்பு, ஆலோசனை சேவைகள் மற்றும் பல்வேறு தயாரிப்புகள் உட்பட உலகத் தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குகிறது. இந்தியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு AVEON இந்த செலவு குறைந்த சேவைகளை வழங்குகிறது.

Aveon Infotech Pvt Ltd நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக உள்ளவர் திருமதி. பார்வதி அவர்கள். இவர் இந்நிறுவனத்தை 2015 ல் தொடங்கி இன்று மிகப் பெரிய நிறுவனமாக வளர்ச்சியடைய செய்துள்ளார். தலைமைப் பண்பு, நிர்வாகத் திறமை, மற்றும் தன்னம்பிக்கை நிறைந்த திருமதி. பார்வதி அவர்கள் புதிய பெண் தொழில் முனைவோர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக உள்ளார்.

- **பூர்வீகம்....**

ஈரோடு மாவட்டம், கோபி காளிச்செட்டிபாளையத்தில் பிறந்த பார்வதி அவர்கள் வெட்டையாம்பாளையத்தில் வளர்ந்துள்ளார். இவரது அப்பா பெயர் திரு.குருசாமி. இலங்கை வேட்டுவக் கவுண்டர். அம்மாவின் பெயர் திருமதிகுஞ்சம்மாள். மயிலம்பாடியில் உள்ள கரிய காளியம்மன் இவர்களது குல தெய்வம்.

- **படிப்பு....**

வெட்டையாம்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்த பின்னர் 12 ம் வகுப்பு வரை கோபி, பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படித்துள்ளார். கோயம்புத்தூரில் உள்ள PSG College of Arts and Science கல்லூரியில் 1995 ம் வருடம் MSc. Nutrition, Food Service Management and Dietetics படித்து முடித்துள்ளார்.

- **கனவு....**

இவருக்கு சிறு வயதிலிருந்தே தொழில் தொடங்க வேண்டும் என்பது லட்சியமாக இருந்து வந்துள்ளது. முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும்பொழுது, படித்து முடித்த பின்னர் வணிகம் செய்யும் நோக்கில், சிறு தானியங்களில் ரெடி மிக்ஸ் தயாரிப்பதில் ப்ராஜக்ட் செய்துள்ளார். அப்போதைய கால கட்டத்தில் அந்த வகையான தயாரிப்புகளுக்கு மிகப் பெரிய மார்க்கெட் இருப்பதை உணர்ந்து புட்டு, இட்லி, தோசை, முறுக்கு, அடை, ஜிலேபி போன்ற வகைகளுக்கு ரெடிமிக்ஸ் தயாரிக்க கற்றுக் கொண்டிருந்திருக்கிறார். பல தரப்பட்ட உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடிய பெரு நிருவனங்களுக்கு நேரில் சென்று ஆர்வத்துடன் தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டிருந்திருக்கிறார்.

ஆனால் சரியான வழிகாட்டுதல் இல்லாததால் அப்போது அவரால் தொழிலில் ஈடுபட முடியவில்லை. ரெடி மிக்ஸ் தயாரிக்கும் பிசினஸ் இன்னும் தனக்குள் ஒரு கனவாகவே உள்ளதாக கூறுகிறார்.

- **குடும்பம்....**

1999 மார்ச் 3 ல் இவருக்கு கவுந்தப்பாடி அருகிலிருக்கும் குளத்துப்பாளையத்தைச் சேர்ந்த திரு. கருணாநிதி என்பவருடன் திருமணம் நடைபெற்றது. திரு.கருணாநிதி அவர்கள் எலக்டிரிக்கல் அண்ட் எலெக்ட்ரானிக்கல் துறை வல்லுனர். கொள்ளுங்கலி வேட்டுவக்கவுண்டர் குலத்தைச் சேர்ந்தவர். வீரமாத்தி அம்மன் இவர்களது குல தெய்வம். தற்பொழுது கோவையிலுள்ள KG மருத்துவமனையில் எலெக்ட்ரிக்கல் துறையில் பணிபுரிகிறார். இவர்களுக்கு ஒரு மகள், ஒரு மகன் உள்ளனர்

மகளின் பெயர் அவந்திகா, மகனின் பெயர் ஸ்ரீ ஹரி. இருவரும் வேலூர் VIT கல்லூரியில் பிடெக் படித்து வருகின்றனர்.

- **சாஃப்ட்வேர் துறை ....**

திருமதி. பார்வதி அவர்களின் அண்ணன் திரு.ஆறுமுகம் அவர்கள் ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினியர். 1993 ல் இருந்து அமெரிக்காவில் வசித்து வருகிறார். பார்வதி அவர்கள் திருமணமாகி குழந்தை பிறந்த பிறகு, தனது அண்ணனின் ஆலோசனைப் படி , 2004 ல்

ஆரக்கிள் பட்டய படிப்பை சென்னையில் ஒரு வருட காலம் தங்கி படித்துள்ளார். தனது குழந்தையை தன் அம்மாவின் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு விடுதியில் தங்கிப் படித்துள்ளார். IT துறை இவருக்கு புதிது என்பதால் அடிப்படை விஷயங்களை இவருடைய அண்ணன் தான் இவருக்கு கற்றுத் தந்திருக்கிறார். தினமும் பிரவுசிங் சென்டர் சென்று தன் அண்ணனிடம் இரண்டு மணி நேரம் படித்த பிறகு ஹாஸ்டலுக்கு சென்று இரவு நேரங்களில் மூன்று மணி வரை மற்ற பாடங்களை படித்துள்ளார். அந்த அளவிற்கு மிக கடினமாக உழைக்க வேண்டி இருந்தது. பின்னர் மணிப்பால் தொலைதூர கல்வி வழியாக Msc IT படித்துள்ளார்.

- **பிஸினஸ்....**

முழுமையாக IT துறையை பற்றி தெரிந்து கொண்ட பின்பு தான் பிசினஸில் இறங்கியதாக கூறுகிறார். ஆரம்பத்தில் இன்னொருவருடன் இணைந்து கம்பனியை தொடங்கியுள்ளார். முதல் ஒரு வருடம் முன் தயாரிப்பு வேலைகள் செய்யவே தேவைப்பட்டிருக்கிறது. பள்ளி, கல்லூரி, பல்கலைகழகங்களுக்கு தேவையான ERP சாஃப்ட்வேர் தயாரித்தனர். பின்னர் அந்த கம்பனியை மூடி விட்டு தனியாக கோயம்புத்தூரில் 2015 ஏப்ரலில் Aveon Infotech Pvt Ltd என்னும் நிறுவனத்தை தொடங்கி வெற்றிகரமாக நடத்தி வருகிறார். 58 நபர்கள் வேலை செய்கின்றனர்.

- **தயாரிப்புக்கள்....**

அஸ்ஸாம், மத்திய பிரதேசம், ஹைதராபாத், தெலுங்கானா, ராஜஸ்தான், பெங்களூரு, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் உள்ள பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் இவருடைய மென்பொருளை பயன்படுத்தி வருகின்றனர். சிங்கப்பூர் Airline industry க்கு தேவையான சாஃப்ட்வேர் தயாரித்து தந்துள்ளார். 42 சர்வதேச விமான நிலையங்களில் இவரது மென்பொருளை பயன்படுத்தி வருகின்றனர். மத்திய, மாநில அரசுகளுக்காக போக்குவரத்து விதிமீறல் கண்டறிவதற்கான செயலியை தயாரித்துள்ளார். பல பள்ளி, கல்லூரி, மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு ஆன்லைன் தேர்வுகள் நடத்த இவர்களது மென்பொருளை தான் பயன்படுத்துகின்றனர். மேலும் சர்வதேச நிகழ்சிகளுக்கு தேவையான ERP சாஃப்ட்வேர் தயாரித்து வருகின்றனர்.

- **வாங்கியுள்ள விருதுகள்....**

இந்திய ராணுவத்திற்கு தேவையான மென்பொருள் தயாரித்து கொடுத்ததற்காக திருமதி.பார்வதி அவர்களுக்கு பூனேவில் விருது அளித்தனர். மத்திய போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்காரியிடம் இருந்தும் விருது பெற்றுள்ளார்.

பாரதியார் பல்கலைகழகத்தில் மிக குறைந்த கால அவகாசத்தில் டிஜிட்டல் தொழில் நுட்பத்தை புகுத்தியதில் பெரும் பங்கு வகித்துள்ள இவருக்கு பல்கலைகழகத்தின் துணை வேந்தரிடம் இருந்து பாராட்டும், விருதும் கிடத்தது.

• சவால்கள் ....

எல்லா துறைகளிலும் பெண்களுக்கு நிறைய சவால்கள் உள்ளன என்கிறார் திருமதி.பார்வதி அவர்கள். இவருடைய தொழிலை பொறுத்தவரையில் அடிக்கடி நிறைய பயணங்கள் செய்ய வேண்டியிருப்பதாகவும், எங்கு செல்வதாக இருந்தாலும் யாருடைய துணையும் இல்லாமல் தனியாகத்தான் செல்வதாகவும் கூறுகிறார். மென்பொருள் என்பது கண்ணுக்கு தெரியாத ஒரு பொருள். அதைப் பற்றி கஷ்டமர்களிடம் புரிய வைப்பது தான் மிகப் பெரிய சவால் என்கிறார்.

• குடும்பத்தினரின் ஆதரவு ..

இவருடைய கணவர் மற்றும் குடும்பத்தினர் மிகவும் உறுதுணையாக இருப்பதாக கூறுகிறார். இவருடைய அம்மா, அப்பா இருவரும் இவருடன் தான் உள்ளனர். தனது அம்மா தான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வதாகவும், குழந்தைகளும் சிறு வயது முதலே இவருடைய உதவியை எதிர்பார்க்காமல் அவர்களே படித்துக் கொள்வதாகவும் கூறுகிறார்.

விடா முயற்சியே வெற்றிக்கு அடிப்படை என்பதை மனதில் நிறுத்தி, போட்டிகள் நிறைந்த கணினி தொழில் நுட்ப உலகில் தனக்கென தனி இடத்தை பிடித்திருக்கும் திருமதி. பார்வதி அவர்கள் பெண்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறார் என்பது மிகையல்ல.

நீங்களும் தொழில் முனைவோர் ஆகலாம்

(Be An Entrepreneur) 4

ஐந்து காரணிகளை - அலசுவோம்

வணக்கம். கடந்த மூன்று இதழ்களில் நீங்களும் தொழில் முனைவோர் ஆகலாம் என்ற தலைப்பில் ஏன் தொழில் முனைவோர் ஆக வேண்டும், என்ன, என்ன பயன்கள் என ஐம்பது காரணங்களை பார்த்தோம் முதல் இதழில். பிறகு இரண்டாவதாக முதலில் என்னென்ன துறைகளில் வணிகம் செய்யலாம் என உற்பத்தி, விற்பனை மற்றும் சேவை பிரிவு என விளக்கமாக பார்த்தோம். சந்தை ஆய்வு தொடர்பாகவும் தகவல் சேகரிப்பு முறைகள் பற்றியும் பார்த்தோம். மூன்றாவதாக நிதி பற்றி விளக்கமாகப் பார்த்தோம்.

கடந்த மூன்று கட்டுரை தொடர்பாக பலரும் நல்ல பின்னூட்டங்களை நேரடியாகவும், தொலைபேசி வாயிலாகவும், குறுஞ்செய்தி வழியாகவும் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும். இன்று இந்த நான்காவது மாதத்தில் ஒரு வணிகத்தை துவக்குவதற்கு முன்பாக மேலும் சில விபரங்கள், காரணிகளின் தகவல்களைத் திரட்டி ஐந்து காரணிகள் என்ற தலைப்பில் அலசி ஆராய்ந்து பார்க்க உள்ளோம். அதன் மூலம் புதிய வணிகத்தைப் பற்றியும் அதற்கு தயார் படுத்த வேண்டியவை குறித்தும், எதிர் கொள்ள வேண்டிய தடைகள் / சவால்கள் / பிரச்சினைகள் குறித்ததும் நமக்கு ஒரு தெளிவான விபரம் கிடைக்கும்.



ஐந்து காரணிகளை – அலசுவோம் என்ற தலைப்பில் புதியதாக தொழில் துவங்குவோர் - கீழ்க்கண்ட ஐந்து காரணிகளை அலசி ஆராய்ந்தால் அவர்களின் வணிகம் மிகவும் வெற்றிகரமானதாக இருக்கும்.

- புதிய போட்டியாளர்களின் பயமுறுத்தல்
- மாற்று பொருட்கள்
- போட்டியாளர்கள்
- பொருள் / சேவை வழங்குபவர்
- வாடிக்கையாளர்

மேற்கண்ட தலைப்புகளில் கிடைக்கும் தரவுகள், விபரங்களைக் கொண்டு மேலும் உங்களது வணிக யுக்த்திகளை சீர்திருத்தவும், வணிக யுத்திகளை பட்டை தீட்டவும், புதிய புதிய யுக்திகள் வகுக்கவும், மிக எளிதாகவும், மிகத் தெளிவாகவும் உங்களது வணிக இலக்குகளை நிர்ணயிக்கவும், நிலையான வழிகாட்டுதல்களை அமைக்கவும் ஏதுவாக இருக்கும். அதற்கான ஐந்து காரணிகள் என்ன என்பதை மேலே பார்த்தோம். இப்போது ஒவ்வொன்றாக விளக்கமாக பார்ப்போமா...

1. புதிய போட்டியாளர்களின் பயமுறுத்தல்

உதாரணத்திற்கு சில வணிகப் பெயர்களையும் வணிக விபரங்களையும் கீழே பட்டியலிட்டுள்ளேன். அந்த பட்டியலில் உள்ள வணிகத்திற்கு பயமுறுத்தல்கள் ஆக பல்வேறு காரணிகள் தற்போது உள்ளது. அதில் சில காரணிகளை நான் குறிப்பிட்டுள்ளேன். உங்களுக்கும் சில காரணிகள் தெரியும். அதையும் நீங்கள் குறிப்பெடுத்து உங்கள் வணிகத்தோடு தொடர்பு படுத்தி தற்போது உங்களது வணிக பயமுறுத்தல்களைப் பட்டியலிடுங்கள்..

- காய்கறிக் கடை - Online Vegetable apps
- மளிகைக் கடை - Online Grocery Mart
- சிறு துணிக் கடை - Branded Shopping Mall
- இறைச்சிக் கடை - Online Meet Stall apps
- காப்பீட்டு முகவர் - Online Insurance
- சிறு நகைக் கடை - Branded Jewelers
- மருந்துக் கடை - Online Medicine apps
- பயணியர் வாடகை வாகனம் - Online Service Providers
- மருத்துவமனை - Online Consultation
- தனிப் பயிற்சிக் கூடம் - Online Tuition Apps

காய்கறிக் கடை - உதாரணத்திற்கு ஒரு நடுத்தரமான அல்லது சிறு காய்கறிக் கடை வைத்துள்ளீர்கள் எனக் கொள்வோம். உங்களுக்குப் போட்டியாக மிகப்பெரிய காய்கறி விற்பனை மையங்கள் / நிலையங்களை அமைத்து தற்போது மிகப் பிரமாண்டமாய் விற்பனை செய்து வருகிறார்கள். நிறைய தள்ளுபடி, நிறைய காய்கறிகள் வகைகள் / பழ வகைகள் ஒரே குடையின் கீழ் விற்பனை செய்கிறார்கள். கணினி மயமாக்கப்பட்ட தானியங்கி சேவை, சுய சேவை, ரசீது வசதி, மின்னனு பணப் பரிமாற்றம் என பல்வேறு ஈர்ப்பு யுக்திகள், புதிய புதிய வணிக வழி முறைகள் இப்போது மக்களிடையே புதிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இது ஒருபுறமிருக்க மற்றொரு வழியாக வாடிக்கையாளர்களை நோக்கி சிறு குறு வணிகர்கள் சிறு சிறு வண்டிகளில் / வாகனங்களில் இல்லம் தேடி நேரடியாக காய்கறிகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறார்கள். எனவே ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு வணிகத்திற்கும் பல்வேறு வகையான பயமுறுத்தல்கள் தற்போது உள்ளது... எனவே நீங்களும் உங்கள் வணிகத்திற்கு எவை எவை பயமுறுத்தல்களாக இருக்கும் என நீங்கள் உடனடியாக அலசி ஆராய வேண்டியுள்ளது..

2. மாற்றுப் பொருட்கள் (Substitute)

ஒரு பொருளுக்குப் பதில் மற்றொரு பொருள்...

ஒரு சேவைக்கு பதில் மற்றொரு சேவை...

இரண்டு பொருட்கள் அல்லது பல பொருட்களை ஒன்றிணைத்து ஒரே பொருள்...

இரண்டு சேவை அல்லது பல்வேறு சேவைகளை ஒன்றிணைத்து ஒரே சேவை ...

இன்று வணிகத்தின் பல்வேறு மாற்றங்கள் ஒவ்வொரு தினமும் / வாரமும் / மாதமும் / வருடமும் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் மாற்றுப் பொருட்கள்... மாற்று சிந்தனை... வணிகத்தில் மிக முக்கியமாக பார்க்கப்படுகிறது.

உதாரணத்திற்கு ஒரு சில பொருட்களைக் கூற முடியும். அனால் இன்று எண்ணிலடங்காத பொருட்கள் / சேவைகள் என பல்வேறு மாற்றங்கள் வணிகத்தில் உள்ளது... இபோது நீங்களே ஒரு தாளை எடுத்து குறிப்பெடுத்துப் பாருங்கள் உங்களது அன்றாட வாழ்வில் கடந்த பத்தாண்டிற்கு முன்பு / இன்று என... ஏன்...? கடந்த ஒரிரு ஆண்டிற்கு முன்பு / இன்று என... பல்வேறு மாற்றங்கள் நடந்துள்ளது.

3. போட்டியாளர்கள்

நீங்கள் செய்யும் வணிகத்தை… பொருளை உற்பத்தி செய்வதோ / பொருட்களை வாங்கி விற்பனை செய்வதோ அல்லது சேவை வழங்குவதோ என அதே போல் இன்று பலரும் செய்கிறார்கள்… அவர்கள் அனைவருமே உங்களது வணிகப் போட்டியாளர்களே…

இங்கே ஏன்…? வாடிக்கையாளர்கள் பிற போட்டியாளர்களிடம் அதிக வணிகம் செய்கிறார்கள் அல்லது சேவையைப் பெறுகிறார்கள்…? உங்களிடம் ஏன் வணிகம் செய்வதில்லை…? உங்களது சேவையைப் பெறவில்லை…? என்ற காரணிகளை முதலில் நீங்கள் கண்டு உணருங்கள்… ஒவ்வொன்றாகப் பட்டியலிடுங்கள்…!!!

நீங்கள் ஒரு கடை வைத்து உள்ளீர்கள்… உங்கள் கடைக்கு அருகிலேயே அல்லது எதிரிலேயே ஒருவர் கடை வைக்க இயலும்… அப்படி நிறைய பேர் இன்று வைத்துள்ளனர்…! நீங்கள் விற்பனை செய்யும் அதே பொருளை அதே தரத்துடனும் விற்பனை செய்கிறார் இப்பொது நீங்கள் என்ன செய்ய இயலும்…! அவர் உங்களுக்கு நேரடியான போட்டியாளர்…

4. பொருள் / சேவை வழங்குபவர்



இன்று எப்படி நீங்கள் ஒரு பொருளை உற்பத்தி செய்கிறீர்களோ அல்லது வாங்கி விற்பனை செய்யும் கடை வைத்து இருக்கிறீர்களோ அல்லது சேவை செய்கிறீர்களோ அதேபோல உங்களுக்கு அருகிலேயே அல்லது எதிரிலேயே ஒருவர் அதை வணிகம் செய்கிறார் என பார்த்தோம் அதற்கு போட்டியாளர் என்றும் நாம் கூறினோம்...

நீங்கள் ஒரு பொருளை உற்பத்தி செய்ய மூலப்பொருட்களை பெறுவதாகட்டும் அல்லது வாங்கி விற்பனை செய்வதாகட்டும் அல்லது சேவை வசதியைப் பெறுவதாகட்டும், அதேபோல பொருட்களை பலர் விற்பனை செய்தாலும் நீங்கள் ஒருவரிடமோ அல்லது ஒரு சிலரிடமோ பெறுகிறீர்கள்...

அதற்கான காரணங்களை கூறுங்கள்...

பதில்களை பட்டியலிடுங்கள்....

ஏன் நீங்கள் பிறரிடம் மூலப்பொருட்களை வாங்கவில்லை ...?

அல்லது பொருட்களை வாங்கி விற்பனை செய்யவில்லை...?

அல்லது சேவை வசதியை பயன்படுத்தவில்லை ..?

என்பதற்கான காரணத்தையும் கூறுங்கள்... பட்டியலிடுங்கள்...

இது போலவே உங்களிடமும் ஒரு வாடிகையாளர் பொருட்களை வாங்குவதற்கோ அல்லது சேவையைப் பெறுவதற்கோ யோசனை செய்வார் அவரும் உங்களை போலவே பட்டியலிடுவர் தானே ..?

இப்பொது நீங்கள் எப்படி வணிகம் செய்ய வேண்டும் என உங்களுக்கு வழி கிடைத்ததா ..?

5. வாடிக்கையாளர்

வாடிக்கையாளரே முதன்மையானவர்... (Customer First)

வாடிக்கையாளரே ராஜா... (Customer is The King)

வாடிக்கையாளரே கடவுள்... (Customer is The God)

இன்றைய காலகட்டத்தில் வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறை / எதிர்பார்ப்புகள் பல்வேறு மாற்றங்களுடன் மாறி இருக்கிறது, தேவைகள் அதிகமாகி இருக்கிறது. ஒரு காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கினால் போதுமானது... (Customer Service)

அதன் பின்பு வாடிக்கையாளர்கள் சேவையைத் தாண்டி மனத் திருப்தி அடையும் அளவு பொருட்கள் / வசதிகள் / சேவைகள் இருக்க வேண்டும் என எதிர்பார்த்தனர்... (Customer Satisfaction)

ஆனால் இன்றோ வாடிக்கையாளர்கள் அதையும் தாண்டி வேறு எதையோ எதிர்பார்க்கிறார்கள்...

அவ்வாறு எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை கண்டுணர்ந்து பூர்த்திசெய்யும் வணிகப் பொருளே / வணிகமே / வணிக சேவையே இன்று வெற்றி அடைந்துள்ளது.

மிக எளிதாக வாடிக்கையாளரை அணுக வேண்டும்...

வாடிக்கையாளரின் தேவைகள் உடனடியாக பூர்த்தியாக வேண்டும்...

எந்த ஒரு சேவையும் உடனடியாகக் கிடைக்க வேண்டும்...

வாடிக்கையாளரை சரியாகப் பின் தொடர வேண்டும்...

மிக எளிதான தொடர்பில் இருக்க வேண்டும்...

மிகக் குறைந்த விலை இருக்க வேண்டும்..

மிகக் குறைந்த சேவை கட்டணம் இருக்க வேண்டும்..

பொருட்கள் தரமானதாக இருக்க வேண்டும்...

விலை அதிகமாக இருந்தாலும் அதற்குரிய தரம், மிகச் சிறந்த சேவை வழங்கினால் அதையும் வாடிக்கையாளர்கள் ஏற்று அதற்குறிய தொகையை தருவதற்குத் இன்று பல வாடிக்கையாளர்கள் தயாராகவே உள்ளனர்.

இன்று வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் அதிகமாகவும் அதை பூர்த்தி செய்யும் வணிகம் அல்லது சேவை புரிபவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். இந்த இடைவெளியை எந்த ஒரு வணிகம் செய்வோர் தங்களது பொருட்கள் / வணிக சேவையில் பூர்த்தி செய்கிறாரோ அவரே அதிக அளவு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் இன்றைய வணிகச் சூழலில் உள்ளது.

மேற்கண்ட ஐந்து தலைப்புகளில் பல உதாரணங்கள், வணிக நிறுவனங்கள், வணிகப் பொருட்கள், வணிக சேவைகள் போன்றவற்றை நீங்கள் பட்டியலிட்டுருப்பீர்கள். உங்களால் அவைகளை எதிர்கொள்ளும் வணிகத் திறன் உள்ளதா…? வணிக வசதி பொருளாதார வசதி உள்ளதா…? அல்லது உங்களிடம் மாற்று யோசனை உள்ளதா…? என முடிவு செய்யுங்கள். இல்லையெனில் புதியதாக உங்களுடைய வணிக யுக்திகளை வகுக்கவும், அதற்குரிய வணிக மேம்பாட்டு ஆலோசகர்கள் அணுகி கலந்தாலோசனை செய்யவும் பின்பு திட்டங்களைத் தீட்டவும், உங்களால் நிச்சயமாக மிகச் சிறந்த பொருட்களை உற்பத்தி செய்யவோ அல்லது வாங்கி விற்பனை செய்யவோ அல்லது மிகச் சிறந்த சேவை வழங்க என்னால் முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டு இருப்பின், அதற்கான சூழல் வசதி வாய்ப்பு இருப்பின் நீங்கள் உங்கள் புதிய வணிகத்தை துவங்கலாம், இருக்கும் வணிகத்தை மேம்படுத்தலாம்,

மிகச் சிறந்த தரமான பொருட்கள் உற்பத்தி செய்து / விற்பனை செய்து அல்லது சேவைகளை வழங்குபவரே வணிகத்தில் சாதிக்க முடியும்.

வாழ்த்துக்கள்… நன்றி வணக்கம்…

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம் –

கே. வி. இரமேஷ்
மனித வள மேம்பாட்டுப் பயிற்சியாளர்
மற்றும் ஆராய்ச்சியாளர்
வணிக மேம்பாட்டு ஆலோசகர்

வேட்டுவர் டிவியின் முதலாம் ஆண்டு விழா

நமது வேட்டுவர் டிவியானது கடந்த வருடம் மார்ச் 6 ம் தேதி YouTube சேனலாக ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 2000 Subscribers நம்முடன் இணைந்துள்ளனர். 200க்கும் மேற்பட்ட விடியோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளளது. நமது சமுதாய வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் கல்வி, வணிகம், வரலாறு, ஆரோக்கியம், அரசியல் மற்றும் ஆன்மீகம் தொடர்பான வீடியோக்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

ஆடி 18 அன்று மாமன்னார் வல்வில் ஒரி விழாவை சிறப்பிக்கும் வகையில் “வேட்டுவக்கவுண்டர் சமுதாய முன்னேற்றத்திற்கு பெரும் பங்கு வகிப்பது வணிகமா?.... வேலை வாய்ப்பா?....” என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இணைய வழியில் நடத்தப்பட்டது.

ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று “பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையானது கல்வியா?.... வீரமா?.... பொருளாதார சுதந்திரமா?.... அங்கீகாரமா?....” என்னும் தலைப்பில் கருத்தரங்கம் இணைய வழியில் நடத்தப்பட்டது. இந்த கருத்தரங்கம் முற்றிலும் பெண்களாலேயே நடத்தப்பட்டது தனிச் சிறப்பு.

தீபாவளியை முன்னிட்டு "வேட்டுவக் கவுண்டர் சமுதாய முன்னேற்றத்திற்கு பெரும் பங்கு வகிப்பது உள்ளூர் வாழ்க்கை முறையா?.... அல்லது வெளியூர் வாழ்க்கை முறையா?...." என்ற தலைப்பில் கோபிசெட்டி பாளையத்தில் நேரடியாக படப்பிடிப்பு நடத்தி தீபாவளியன்று ஒளிபரப்பு செய்யப்பட்டது.

வேட்டுவர் டிவியின் செய்தி பிரிவானது கடந்த நவம்பர் மாதம் 11 ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. தினந்தோறும் மாலை 7.30 மணிக்கு நமது சமுதாயம் சார்ந்த செய்திகள் மற்றும் தகவல்கள் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

நமது வேட்டுவர் டிவியின் முதலாம் ஆண்டு விழாவை முன்னிட்டு **"ஏட்டிக்குப் போட்டி"** நிகழ்ச்சி வருகின்ற 06.03.2022 காலை 11 மணிக்கு நமது வேட்டுவர் டிவியில் ஒளிபரப்பாக உள்ளது. "குழந்தை வளர்ப்பில் சிறந்தவர்கள் முந்தைய தலைமுறை பெற்றோர்களா?... நவீன கால பெற்றோர்களா?..." என்னும் தலைப்பில் நடைபெற உள்ள ஏட்டிக்குப் போட்டி நிகழ்ச்சியை தவறாமல் கண்டுகளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். வேட்டுவர் டிவிக்கு ஆதரவு அளித்து வரும் நல் உள்ளங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்து ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வேட்டுவர் டிவியின் முதலாம் ஆண்டு விழா

ஏட்டிக்கு போட்டி

சிறப்பு நிகழ்ச்சி

6/3/22 காலை 11 மணிக்கு ஒளிபரப்பப்படுகிறது